Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.
Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

No. C-29 /2020 02.11.2020

இறை இயேசுவில் அன்பிற்கினிய அருட்பணியாளர்களே, இறைமக்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துகள்!

நமது நாட்டில் வாழும் தலித் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களை நினைத்துப் பார்க்கவும், குறிப்பாகத் தலித் பெண்களுக்கு நடக்கும் அநீதிகளை எதிர்த்துக் குரல்கொடுக்கவும் அதற்காக இறை வேண்டல் செய்யவும் இந்த நாட்களில் நான் உங்களை அழைக்கிறேன். நம் சமூகத்தில் வாழும் தலித் பெண்கள் மற்ற பெண்களைவிட அதிக வலிகளையும் வேதனைகளையும் சந்திக்கின்றார்கள். அவர்கள் அனுபவிக்கும் வேதனைகளும் இன்னல்களும் ஏராளம். 80 மில்லியன் தலித் பெண்கள் வாழும் இந்தியாவில் கடந்த வருடம் மட்டும் ஒவ்வொரு நாளும் 10 தலித் பெண்கள் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு இறந்ததாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. தலித் இனத்தவருக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறைந்து அவர்களும் இச்சமூகத்தில் மரியாதையுடனும் மனித மாண்புடனும் நடத்தப்பட வேண்டும். பொருளாதாரத்திலும் சமூகத்திலும் அவர்கள் சந்திக்கும் இரட்டைப் பாகுபாடுகள் நீங்கப்பெற்று சம உரிமை பெற வேண்டும். அவர்கள்மேல் திரு அவை கொண்டிருக்கும் தனிக்கரிசனைகள் சம உரிமை பெற வேண்டும். அவர்கள் முன்னேற்றத்திற்காக அரசிடம் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் கிடைக்கப்பெற வேண்டும். அதற்காக எல்லா மக்களும் இணைந்து முயற்சி செய்ய வேணடும். இதனை மனம் கொண்டு, **08.11.2020, ஞாயிறன்று நடைபெறும் திருப்பலியைத் தமிழகத் திரு அவையுடன் இணைந்து தலித் விடுதலைக்கான சிறப்பு நாளாகக் கொண்டாடுவோம்.**

தமிழக ஆயர் பேரவையில் பட்டியலினத்தார்/பழங்குடியினர் பணிக்குழு அச்சிட்டு வழங்கியுள்ள திருப்பலிக் குறிப்புக்களோடு படைப்பாற்றல் மிக்க நமது வழிபாட்டு அம்சங்களையும் சேர்த்து நமது ஆலயங்களில் பயன்படுத்தும்படி அன்பாய்க் கேட்டுக்கொள்கிறேன். தலித் மக்களின் விடுதலை எல்லா மக்களின் விடுதலையே என்ற விரிந்த மனப்பான்மை நம் எல்லோருக்கும் உருவாகட்டும்.

அனைவருக்கும் எனது அன்பின் ஆசி!

கிறிஸ்துவின் மனநிலையில்



**+ நசரேன் சூசை**

கோட்டார் ஆயர்